TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) நீத்தார் நினைவுக் குறிப்பு.

நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு தேசிய கவிஞ ராகவும் இருந்த நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இன்று அதிகாலையிலே இறந்துவிட்ட செய்தியை இம் மன்றத்திற்கு வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். அவர்களின் பிரிவால் வருந்தும் அன்னாரின் குடும்பத்திற்கு இந்த மன்றத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த கவிஞருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பி னர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.